நீர்வளத்துறை

TNWRD

அனுப்புனர்
பொறி.அ.நித்தியானந்தன், எம். டெக்.,
செயற்பொறியாளர், நீவது,
ஆற்றுப்பாதுகாப்பு கோட்டம்,
திருச்சி-1.

பெறுநர்
திருமதி.P.கீர்த்தனா,
க/பெ. பிரதீபன்,
எண்.3/42A, புதுதெரு,
காஜாப்பேட்டை,
திருச்சி மாவட்டம்

கடித எண் : 322/M/ **2025 / கோ. 30 (மு) / வ2/ நாள் :** 19.05.2025

அன்புடையீர்,

பொருள் : **பாலம்-திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், எல்லக்குடி கிராமம் கொக்கரசம்பேட்டை கிளை வாய்க்காலின் (புல எண். 76/3) குறுக்கே பாலம் அமைக்க அனுமதி வழங்குதல் தொடர்பாக.**

பார்வை : 1) **மனுதாரர் மனு நாள்: 05.05.2025**

2) **உதவி செயற்பொறியாளர், நீ.வ.து., ஆ.பா.உ.பகோட்டம், திருச்சி.**
க.எண் : 487கோ. 21 / 2025 / நாள் :19.05.2025.

****

பார்வை 1-ல் காணும் மனுதாரர் கடிதத்தில் திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், எல்லக்குடி கிராமம், புல எண் : 76/2B-ல் அமைந்துள்ள இடத்திற்கு செல்வதற்கு ஏதுவாக கொக்கரசம்பேட்டை கிளை வாய்க்காலின் (புல எண். 76/3) குறுக்கே பாலம் அமைக்க அனுமதி கோரியுள்ளீர்கள்.

மேற்காணும் பொருள் தொடர்பான இடம் பார்வை 2-ல் காணும் உதவி செயற்பொறியாளரால் தள ஆய்வு செய்யப்பட்டதில் பாலம் அமைவிடப்பகுதியானது திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், எல்லக்குடி கிராமம், புல எண் : 76/3-ல் ஆகும். மேற்காணும் எல்லக்குடி கிராமம், புல எண் : 76/2B-ல் உள்ள இடத்திற்கு செல்வதற்கு கொக்கரசம்பேட்டை கிளை வாய்க்காலின் (புல எண். 76/3) குறுக்கே பாலம் அமைத்து கொள்ள பரிந்துரை செய்து அறிக்கை பெறப்பட்டது. இப்பாலம் அமைப்பதால் பாசன நீருக்கு இடையூறு இல்லாத காரணத்தினாலும், உதவி செயற்பொறியாளர் அவர்களின் பரிந்துரையின் பேரிலும், கொக்கரசம்பேட்டை கிளை வாய்க்காலின் (புல எண். 76/3) குறுக்கே மனுதாரர் சொந்த செலவில் பாலம் அமைக்க கீழ்காணும் நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள் :

1) இந்த பாலமானது வாய்க்காலின் படுக்கை மட்ட அளவான 1.50 மீட்டர் அகலத்திற்கு குறையாமலும், 7.50 மீட்டர் நீளத்திற்கு மிகாமலும், வாய்க்காலின் தரை மட்டத்திலிருந்து பாலத்தின் கான்கிரீட் பலகையின் அடிப்பாகம் (Bottom of Deck Slab) 1.00 மீட்டர் உயரத்திற்கு குறையாமலும், வாய்க்காலின் நடுவே எவ்வித தூண்கள் இல்லாமலும் அமைக்கப்பட வேண்டும்.

2) பாலம் நீர்வளத்துறையால் நிர்ணயிக்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் கட்டுமான அமைப்பின்படி கட்டப்படவேண்டும். பாலங்கள் கட்டுமானம் பணியின் பொழுது இத்துறை அலுவலர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, இத்துறை களப்பணியாளர்கள் முன்னிலையில் பணி மேற்கொள்ளுதல் வேண்டும். பாலம் கட்டுமான பணிகள் வாய்க்காலில் தண்ணீர் செல்லாத காலங்களில் மட்டுமே மேற்கொள்ள வேண்டும்.

3) பாலம் அமைக்கும் பொழுதும், பயன்பாட்டில் உள்ள பொழுதும் வாய்க்காலின் நீரோட்டத்திற்கு எவ்வித தடையும் ஏற்படா வண்ணம் அமைத்தல் வேண்டும். மண்திட்டுகள், இடிபாடுகள், செடிகொடிகள் ஏதுமின்றி தொடர்ந்து பராமரித்தடல் வேண்டும்.

4) பாலம் அமைக்கும் நிலையில் வாய்க்காலின் கட்டிட கட்டுமானங்களுக்கு எவ்வித சேதமும்ஏற்படாவண்ணம் அமைத்தல் வேண்டும். பாலம் கட்டும் பொழுது இருபுறம் கைப்பிடி சுவர்கள் பாதுகாப்பான நிலையில் அமைத்தல் வேண்டும்.

5) பாலத்தின் மேல் மற்றும் கீழ்புறத்தில் வாய்க்காலின் இரு கரைகளிலும் குறைந்தது 5மீ நீளத்திற்கு தடுப்புச்சுவர் கட்டப்படவேண்டும். பாலம் கட்டும்போது நெடுஞ்சாலைத் துறையின் கையேட்டில் வரைபடங்களில் குறிப்பிட்டபடி தொழில்நுட்ப குறியீடுகளின்படி கட்ட வேண்டும்.

6) பாலம் அமைவிடப்பகுதி 1.50 x 7.50 = 11.25 சதுர மீட்டருக்கு ஆண்டு தோறும் தரைவாடகை செலுத்தப்பட வேண்டும். பதிவுத் துறை ஆவணங்களின் அடிப்படையில் தற்போது நிர்ணயிக்கப்படும் Guideline விலைவிகித அடிப்படையில் பாலத்திற்கு தரைவாடகை ரூ.327/- +GST 18% நடப்பாண்டிற்கு செலுத்தவேண்டும். மேலும் ஒவ்வொரு பசலி ஆண்டும் அரசு நிர்ணயிக்கும் தொகையினை பசலி ஆண்டு தொடங்கும் முன்னரே இத்துறைக்கு ரொக்கமாகவோ, தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் கேட்பு வரைவோலையாகவோ செலுத்துதல் வேண்டும்.

7) காப்புத்தொகையாக ரூ.25,000/- செலுத்தப்பட வேண்டும்.

8) பாலம் கட்டி முடிக்கப்பெற்றவுடன் அதன் மூலம் எவ்வித உரிமையும் கொண்டாட கூடாது. பாலத்தினை நீர்வளத்துறையின் வசம் ஒப்படைக்க வேண்டும். இப்பாலத்தை பிற பொதுமக்கள் உபயோகிக்க எவ்வித ஆட்சேபணையும் எழுப்பக்கூடாது.

9) வாய்க்கால் பகுதியில் எல்லைக்கற்கள் நட்டு கெட்டி மண் கொண்டு கரைகள் பலப்படுத்தி, ஆக்கிரமிப்புகள் ஏதுமின்றி அதன் தன்மைமாறாமல் பராமரித்திடல் வேண்டும். கரையானது அரசு அலுவலர்களின் தல ஆய்விற்கும், பிற விவசாயிகள் இடுபொருட்கள் கொண்டு செல்லும் வகையில் தடையின்றி பாதுகாக்கப்படவேண்டும்.

10) கட்டுமானப்பணியின் போது கரைகளில் உள்ள மரங்களுக்கோ, கட்டுமானங்களுக்கோ, கரைகளுக்கோ எவ்வித சேதமும் ஏற்படுத்தக்கூடாது. அவ்வாறு நேரிடின் மனுதாரர் தனது சொந்த செலவில் தரத்துடன் சரிசெய்திடல் வேண்டும்.

11) பாலம் கட்டுமான பணியின் போது உயிர்க்கோ, உடமைக்கோ எந்த பாதிப்புமின்றி பணி மேற்கொள்ளப்படவேண்டும். எவ்வித இழப்பிற்கும் நீர்வளத்துறை பொறுப்பேற்காது.

12) பாலம் கட்டி முடித்த பின்னர் மீதமுள்ள பொருட்களை உடனே அப்புறப்படுத்த வேண்டும். தண்ணீர் போக்கிற்கு எவ்வித இடையூறும் இருக்கக்கூடாது.

13) துறை ரீதியாக அவ்வப்போது விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படவேண்டும்.

14) பாலம் கட்டி முடித்தவுடன் அதனை புகைப்படம் எடுத்து இத்துறைக்கு சமர்ப்பிக்கவேண்டும்.

15) வாய்க்காலின் குறுக்குவெட்டு பரப்பில் (Designed Cross Section) எவ்வித வேறுபாடும் ஏற்படக்கூடாது.

16) இப்பாலத்தினை வேறு நபருக்கு பெயர் மாற்றம் செய்வதோ, விற்பனை செய்திடவோ அனுமதிக்கப்படும் உபயோகத்திற்கு தவிற பிற உபயோகங்களுக்கு மாற்றம் செய்திட நீர்வளத்துறையின் முன் அனுமதி அவசியமாகும். (Appendix XIII C Tamilnadu Public Work Department Code)

17) பாலம் ஐ.ஆர்.சி தரத்தின்படி நீர்வளத்துறை பொறியாளர்களின் முன்னிலையில் அவர்களின் அறிவுரைப்படி கட்டப்படவேண்டும்.

18) பிற்காலத்தில் வாய்க்காலின் முன்னேற்ற பணிகளுக்கு பாலம் இடையூறாக இருப்பின் பாலத்தை அகற்ற இத்துறைக்கு உரிமை உண்டு.

19) பிற்காலத்தில் கோவில் நிர்வாகத்திற்கும், மனுதாரருக்கும் முரன்பாடு ஏதும் ஏற்படின் அதற்கு இத்துறை பொறுப்பேற்காது.

20) இப்பாலம் குறித்து ஏதேனும் சட்டம்-ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டாலோ, அரசுக்கு இடையூராக அமையும் நிலை ஏற்பட்டாலோ அல்லது மேற்கண்ட நிபந்தனைகள் ஏதும் மீறப்பட்டாலோ முன் அறிவிப்பின்றி இவ்வனுமதி உடனே இரத்து செய்யப்பட்டு பாலத்தினை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

21) மேற்கண்ட நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டது குறித்து மனுதாரர் ரூ.100/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் எழுத்து மூலம் அளிக்க வேண்டும்.

19.05.25

செயற்பொறியாளர், நீவது.
ஆற்றுப்பாதுகாப்பு கோட்டம், திருச்சி.

19/5/25

நீர்வளத்துறை

அனுப்புநர்

பொறி. அ.நித்தியானந்தன், எம்.டெக்.,
செயற்பொறியாளர், நீ.வ.து.,
ஆற்றுப் பாதுகாப்புக் கோட்டம்,
திருச்சிராப்பள்ளி-1.

பெறுநர்

திரு.மு.பன்னீர்செல்வம்,
த.பெ.முனுசாமி,
திருமதி.ப.புஷ்பராணி,
க.பெ.பன்னீர்செல்வம்,
6/2415, அன்னகாமு இல்லம்,
வி.என். நகர், திருவள்ளுவர் அவென்யூ,
பிச்சாண்டார்கோவில், எண்.1 டோல்கேட்,
மண்ணச்சநல்லூர், திருச்சி மாவட்டம்.

கடித எண்.781/M/2025/ கோ.30TC/வ3/நாள் 26 .09.2025.

அய்யா,

பொருள் : தடையில்லாச்சான்று - திருச்சி மாவட்டம் - திருவெறும்பூர் வட்டம் - எல்லக்குடி கிராமம் - கொக்கரசம்பேட்டை கிளை வாய்க்காலின் குறுக்கே - சொந்த செலவில் பாலம் அமைத்துக்கொள்ள தடையில்லாச்சான்று வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. திரு.மு.பன்னீர்செல்வம், த.பெ. முனுசாமி, திருமதி.புஷ்பராணி, க.பெ.பன்னீர்செல்வம், 6/2415, அன்னகாமு இல்லம், வி.என். நகர், திருவள்ளுவர் அவென்யூ, பிச்சாண்டார்கோவில், எண்.1 டோல்கேட், மண்ணச்சநல்லூர், திருச்சி மாவட்டம் அவர்களின் மனு நாள் 28.08.2025.
2. உதவி செயற்பொறியாளர், நீ.வ.து., ஆற்றுப்பாதுகாப்பு உபகோட்டம், திருச்சி அவர்களின் கடித எண்.1057/கோ.21/2025/ உசெபொ(தி)/ நாள் 17.09.2025.

- - - - - -

பார்வை-1ல் காணும் மனுவில் திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், எல்லக்குடி கிராமம், புல எண். 98/2A மற்றும் 98/2B-ல் உள்ள தனது நிலங்களுக்கு சென்று வர ஏதுவாக அருகில் உள்ள கொக்கரசம்பேட்டை கிளை வாய்க்காலின் குறுக்கே தன்னுடைய சொந்த செலவில் பாலம் கட்ட அனுமதி கோரியுள்ளீர்கள்.

மேற்படி பாலம் கட்ட கோரியுள்ள இடம் உதவி செயற்பொறியாளரால் தள ஆய்வு செய்யப்பட்டு பெறப்பட்ட அறிக்கையின்படி, திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், எல்லக்குடி கிராமம் கொக்கரசம்பேட்டை கிளை வாய்க்கால் புல எண். 76/3 ஆகும் எனவும், மனுதாரர் தனது நிலத்திற்கு செல்லவும், இப்பாலம் அமைப்பதால் பாசன நீருக்கு இடையூறு இல்லாத காரணத்தினாலும், பார்வை 2ல் காணும் உதவி செயற்பொறியாளர் ஆ.பா.உட்கோட்டம், திருச்சி அவர்களின் பரிந்துரையின் பேரிலும் கொக்கரசம்பேட்டை

வாய்க்காலின் குறுக்கே தங்களது சொந்த செலவில் நீர்வழிப்பாதை 1.20 மீட்டர் அகலம் மற்றும் 1.50மீட்டர் உயரத்திற்கு குறையாமலும் பாலம் அமைக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் அனுமதி வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. பாலம் மனுதாரர் தனது சொந்த செலவிலேயே அமைத்துக்கொள்ள வேண்டும். மனுதாரர் பெயரில் தடையில்லாச் சான்று வழங்கப்பட்டாலும், மனுதாரர் தனியாக உரிமை கோர இயலாது.

2. இந்த பாலமானது வாய்க்காலின் படுக்கை மட்ட அளவான நீர்வழிப்பாதை 1.20 மீட்டர் அகலத்திற்கு குறையாமலும், வாய்க்காலின் தரை மட்டத்திலிருந்து (Bottom of deck slab) 1.50 மீட்டர் உயரத்திற்கு குறையாமலும், பாலத்தின் நீளம் 7.50 மீட்டருக்கு மிகாமலும், வாய்க்காலின் நடுவில் எந்தவித தூண்கள் இல்லாமலும் அமைக்கப்பட வேண்டும்.

3. பாலத்தின் பயன்பாட்டு பரப்பளவு 5.60மீ. அகலம் x 7.50மீ. நீளம் ஆக 42.00 சதுரமீட்டர் அல்லது 452 சதுர அடியாகும். இதற்கானதரைவாடகை தற்போதுள்ள விதிகளின்படி மூன்று வருட பசலி காலத்திற்குரிய தொகையினை துறைக்கு செலுத்திட வேண்டும். பின்னர் ஒவ்வொரு பிரதி வருடமும் துறை நிர்ணயிக்கும் தரை வாடகையினை தவறாது செலுத்திட வேண்டும்.

4. பாலம் நீர்வளத்துறையால் நிர்ணயிக்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் கட்டுமான அமைப்பின்படி கட்டப்பட வேண்டும். பாலம் கட்டுமான பணியின்பொழுது இத்துறை அலுவலர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, இத்துறை களப்பணியாளர்கள் முன்னிலையில் பணி மேற்கொள்ளுதல் வேண்டும். பாலம் கட்டுமான பணிகள் வாய்க்காலில் தண்ணீர் செல்லாத காலங்களில் மட்டுமே மேற்கொள்ள வேண்டும்.

5. பாலம் அமைக்கும்போதும், பயன்பாட்டில் உள்ளபோதும் வாய்க்காலின் நீரோட்டத்திற்கு எவ்வித தடையும் ஏற்படா வண்ணம் அமைத்தல் வேண்டும். மண்திட்டுகள், இடிபாடுகள், செடிகொடிகள் ஏதுமின்றி தொடர்ந்து பராமரித்திடல் வேண்டும்.

6. பாலம் அமைக்கும் நிலையில் வாய்க்காலின் கட்டிட கட்டுமானங்களுக்கு எவ்வித சேதமும் ஏற்படாவண்ணம் அமைத்தல் வேண்டும். பாலம் கட்டும்பொழுது இருபுறமும் கைப்பிடி சுவர்கள் பாதுகாப்பான நிலையில் அமைத்தல் வேண்டும்.

7. பாலத்தின் மேல் மற்றும் கீழ்புறத்தில் வாய்க்காலின் இரு கரைகளிலும் குறைந்தது 5மீ. நீளத்திற்கு தடுப்புச்சுவர் கட்டப்பட வேண்டும். பாலம் கட்டும்பொழுது நெடுஞ்சாலைத்துறையின் கையேட்டில் வரைபடங்களில் குறிப்பிட்டபடி தொழில்நுட்ப குறியீடுகளின்படி கட்ட வேண்டும்.

8. பாலம் அமைவிடப்பகுதி 452 சதுர அடிக்கு ஆண்டுதோறும் தரைவாடகை செலுத்தப்பட வேண்டும். பதிவுத்துறை ஆவணங்களின் அடிப்படையில் தற்போது நிர்ணயிக்கப்படும் Guideline விலைவிகித அடிப்படையில் பாலத்திற்கு தரை வாடகை ரூ. 1424/- + GST 18% நடப்பாண்டிற்கு செலுத்த வேண்டும். மேலும் ஒவ்வொரு பசலி ஆண்டும் அரசு நிர்ணயிக்கும் தொகையினை பசலி ஆண்டு தொடங்கும் முன்னரே இத்துறைக்கு ரொக்கமாகவோ, தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் கேட்பு வரைவோலையாகவோ செலுத்துதல் வேண்டும்.

9. காப்புத்தொகையாக ரூ. 10,000/- செலுத்தப்பட வேண்டும்.

10. பாலம் கட்டி முடிக்கப்பெற்றவுடன் அதன் மூலம் எவ்வித உரிமையும் கொண்டாட கூடாது. பாலத்தினை நீர்வளத்துறையின் வசம் ஒப்படைக்க வேண்டும். இப்பாலத்தை பிற பொதுமக்கள் உபயோகிக்க எவ்வித ஆட்சேபணையும் எழுப்பக்கூடாது.

11. வாய்க்கால் பகுதியில் எல்லைக்கற்கள் நட்டு கெட்டி மண் கொண்டு கரைகள் பலப்படுத்தி, ஆக்கிரமிப்புள் ஏதுமின்றி அதன் தன்மை மாறாமல் பராமரித்திடல் வேண்டும். கரையானது அரசு அலுவலர்களின் தல ஆய்விற்கும், பிற விவசாயிகள் இடுபொருட்கள் கொண்டு செல்லும் வகையில் தடையின்றி பாதுகாக்கப்பட வேண்டும்.

12. கட்டுமானப் பணியின்போது கரைகளில் உள்ள மரங்களுக்கோ, கட்டுமானங்களுக்கோ, கரைகளுக்கோ எவ்வித சேதமும் ஏற்படுத்தக்கூடாது. அவ்வாறு நேரிடின் மனுதாரர் தனது சொந்த செலவில் தரத்துடன் சரி செய்திடல் வேண்டும்.

13. வாய்க்காலின் குறுக்கு வெட்டுப்பரப்பில் (Designed cross Section) எவ்வித வேறுபாடும் ஏற்படக்கூடாது.

14. பாலம் IRC தரத்தின்படி நீர்வளத்துறை பொறியாளர்களின் முன்னிலையில் அவர்களின் அறிவுரைப்படி கட்டப்பட வேண்டும்.

15. பாலம் கட்டுமானப் பணியின்போது உயிர்க்கோ, உடமைக்கோ எந்த பாதிப்புமின்றி பணி மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வித இழப்பிற்கும் நீர்வளத்துறை பொறுப்பேற்காது.

16. பாலம் கட்டி முடித்த பின்னர் மீதமுள்ள பொருட்களை உடனே அப்புறப்படுத்த வேண்டும். தண்ணீர் போக்கிற்கு எவ்வித இடையூறும் இருக்கக்கூடாது.

17. துறை ரீதியாக அவ்வப்போது விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட வேண்டும்.

18. பாலம் கட்டி முடித்தவுடன் அதனை புகைப்படம் எடுத்து இத்துறைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

19. பிற்காலத்தில் வாய்க்காலின் முன்னேற்ற பணிகளுக்கு பாலம் இடையூறாக இருப்பின் பாலத்தை அகற்ற இத்துறைக்கு உரிமை உண்டு.

20. இப்பாலம் குறித்து ஏதேனும் சட்டம் - ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டாலோ, அரசுக்கு இடையூறாக அமையும் நிலை ஏற்பட்டாலோ அல்லது மேற்கண்ட நிபந்தனைகள் ஏதும் மீறப்பட்டாலோ முன் அறிவிப்பின்றி இவ்வனுமதி உடனே இரத்து செய்யப்பட்டு பாலத்தினை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

21. மேற்கண்ட நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டது குறித்து மனுதாரர் ரூ. 100/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் எழுத்து மூலம் உறுதிமொழி அளிக்கவேண்டும்.

24.09.2025

செயற்பொறியாளர், நீவது,
ஆ.பா.கோட்டம், திருச்சி-1.

24/9/25